உ

# நினைவுச் சரம்



அமரர்

## இராமலிங்கம் சுந்தரம்

அவர்களின்

# நினைவு வெளியீடு

**28-03-1994**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படையல்


வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுலகுற்ற
எமது அன்புத் தெய்வமான
**திரு. இராமலிங்கம் சுந்தரம்**
அவர்களின்

பாத கமலங்களுக்கு
அன்புக் காணிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

# இராமலிங்கம் சுந்தரம் அவர்கள்



**தோற்றம்:**
**20-08-1913**

**மறைவு:**
**26-02-1994**

## தீதி வெண்பா

சீரோங்கு ஸ்ரீமுகத்து மாசி பதின்நான்காம்நாள்
காரோங்கு நற்பக்கப் பிரதமையாம் — பேரோங்கு
சுந்தரனார் பூவுலகை விட்டுயர்ந்தே நற்பெரு
இந்திரனார் உலகுற்ற தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகள்

## தேவாரம்

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே

## திருவாசகம்

தோலுந் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமுந் தொக்க வளையு முடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூ தாய் கோத்தும்பி

## திருவிசைப்பா

கருதிவா னவனாந் திருநெடு மாலாஞ்
சுந்தர விசும்பி னிந்திர னாம்
பருதிவா னவனாம் படர்சடை முக்கட்
பகவனா மகவுயிர்க் கமுதாம்
எருதுவா கனனாம் எயில்கண்மூன் றெரித்த
ஏறுசே வகனுமாம் பின்னும்
கருதுவார் கருது முருவமாங் கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே.

## திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத வறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவா ருலகில்
ஊரு முலகுங் கழற வுழறி
யுமைமண வாள னுக்காட்
பாரும் விசும்பு மறியும் பரிசுநாம்
டல்லாண்டு கூறுதுமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெரியபுராணம்

ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே யாக
இந்துவாழ் சடையான் ஆடுமா னந்த
எல்லையில் தனிப் பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## அபிராமியந்தாதி

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வ வடிவுந் தருநெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரரின் வாழ்க்கைத் தடம்

மருத நிலத்து வனப்பு மிக்க கிராமம் உடுவில். உலகைப் புரக்கும் அன்னையாகிய சக்தியின் அருளைப் போற்றி வாழுகின்ற விஸ்வப்பிரமகுல மக்கள் சிறப்பாக வாழுகின்ற அப்பதியிலே அமரத்துவம் எய்திவிட்ட திரு. வேலுப்பிள்ளை இராமலிங்கமும் அவர்தம் பிரியபத்தினியான ஆச்சிப் பிள்ளையும் செய்த தவப் பயனாய் திரு. சுந்தரம் அவர்கள் பிறந்தார்கள். இவருடன் பிறந்தவர்கள் இருவர். அவர்கள் தவமணி என்னும் அன்புச் சகோதரியும், கதிரவேலு என்னும் சகோதரரும் ஆவர். அன்பால் பிணைப்புண்ட இவர்கள் இன்பமாய் வாழ்ந்தார்கள். அமரர் சுந்தரம் அவர்கள் தனது வாலிபப் பருவத்தில் சங்கானை காளி கோவிலடியைச் சேர்ந்த ஸ்ரீமான் இராமலிங்கம் அவர்களுக்கும் அவரது அன்பு மனைவி ஸ்ரீமதி இராசம்மா அவர்களுக்கும் புத்திர பாக்கியங்களாகக் கிடைத்த சின்னப்பு, சுப்பிரமணியம், பராசக்தி, வடிவேலு ஆகியோரில் பராசக்தி அவர்களைத் தனது இல்லக் கிழத்தியாக்கிக் கொண்டார்.

அமரர் சுந்தரம் அவர்களின் இல்லறப்பயனாய் வேலுப்பிள்ளை, பாலகிருஷ்ணன், யோகேஸ்வரன், பாக்கியலட்சுமி, சரோஜினிதேவி, பத்மாவதி, பத்மநாயகி, தனபாலசிங்கம், சுபாஜினி ஆகியோரைப் பிள்ளைகளாகப் பெற்றார்.

பிள்ளைகளிலே மூத்த புதல்வனான வேலுப்பிள்ளை அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சரஸ்வதியினை திருமணம் புரிந்து கமலினி தட்சாஜினி, கங்காசுதன் ஆகியோரைப் பெற்றார்.

யோகேஸ்வரன் சண்டிலிப்பாயினைச் சேர்ந்த மங்களராணியை வதுவை புரிந்து தம்பதிகளாகச் சுவிஸ் நாட்டில் சிறப்பாக வாழ்கிறார்கள். புதல்விகளுள் மூத்தவரான பாக்கியலட்சுமி புத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்ட மகாலிங்கத்தை மணம் புரிந்து சுகிர்தா, சுதாகர், நிசாந்தன் என்போரைப் பெற்றனர். சறோஜினிதேவி சங்கானையில் மகேந்திரனை மணம் புரிந்தார். இவர்களுக்கு கஜநாத்; அமுதாஜினி, சிந்தாஜினி எனும் மக்கள் பிறந்தனர். இவர்கள் இப்போது இலண்டனில் வாழ்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்மாவதி மாவிட்டபுரத்தைச் சேர்ந்த கோபால கிருஷ்ணனை மணம் புரிந்தார். இவர்களுக்கு மேகலா, விஷ்ணு வர்த்தனன், பவித்திரா என்போர் பிள்ளைகள் ஆயினர்.

பத்மநாயகி வேலணையைச் சேர்ந்த சந்திரசேகரம் அவர்களை மணம் புரிந்தார். ஜேர்மனியில் வசிக்கின்ற இவர்களின் வாரிசுகளாக சகானா, சரன், விளங்குகின்றனர்,

தனபாலசிங்கம் எனும் புதல்வன் இலண்டனில் வசிக்கிறார். இளைய மகளான சுபாஜினி சங்கானையிலே வசிக்கிறார்.

அமரர் அவர்கள் உணவுக் கட்டுப்பாட்டு இலாகாவில் களஞ்சியப் பொறுப்பாளராக இருந்தவர். பின் அத் தொழிலை விடுத்து ஒப்பந்தகாரராக விளங்கியவர். இவர் சிறந்த விளையாட்டு வீரர். அகில இலங்கை கரப்பந்தாட்டக் குழுவில் ஒரு வீரனாக விளங்கியவர். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் செய்வத் தொண்டிலே சிறந்தவர். சுழிபுரம் பத்திரகாளி கோவில் பரிபாலன சபைத் தலைவராக இவர் கடமை புரிந்தவர் இவரது உழைப்பில் ஆலயம் பெரு வளர்ச்சி பெற்றமை யாவருமறிந்தது.

இல்லக் கடமைகளில் முழுமை கண்ட இவர் தனது பணிகளைப் பொது விடயங்களுக்கும் விஸ்தரித்தவர். முதுமைக் காலத்திலும் உற்சாகமாக வாழ்ந்தவர். பிள்ளைகள் சிறப்பாகவும், சீராகவும் வாழ்வது கண்டு வாழ்க்கையில் திருப்தி கண்டவர்.

உலகியற் கடமைகளை இனிதியற்றிய இவர் இறையடியினை 1994 பெப்ரவரி மாதம் 26ம் திகதி இரவு 7.00 மணியளவில் தழுவிக் கொண்டார்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழிபுரம்

## ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான பரிபாலன சபையினரின் இதய அஞ்சலி.

# எங்கள் தலைவா எங்கு நீர் சென்றீர்?

எங்கள் யாவரினதும் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய உயர் திரு. இராமலிங்கம் சுந்தரம் அவர்கள் இறைபதம் எய்தி விட்டார் என்ற செய்தி அறிந்ததும் நாம் யாவரும் மீளாத் துயரில் ஆழ்ந்தோம். எமது தேவஸ்தானத்தில் இவரது இடத்தை நிரப்ப எம்மவரில் யாருளர்? என்ற கேள்வி எம் மத்தியில் எழுந்துள்ளது. எமது தேவஸ்தானப் பரிபாலனசபை ஆரம்பித்த காலந் தொடக்கம் (ஒரு சிறு காலம் தவிர) இன்றுவரை எங்கள் சபையின் தலைவராக இருந்து எங்களெல்லோரையும் நன்முறையில் வழிநடத்திய பெருந்தகையை இழந்துவிட்டோம்.


அன்னாரின் மறைவு எமக்கு மாலுமி இல்லாத கப்பலாகி விட்டது. கடந்த காலத்தில் இவரின் தலைமையின் கீழ் பல ஆக்கபூர்வமான பணிகள் எமது தேவஸ்தானத்தில் நடைபெற்றுள்ளது. தற்போது தேவஸ்தானத்தில் நடந்துகொண்டிருக்கும் திருப்பணி வேலைகளே இதற்குச் சான்றாகும். வேலையை பூர்த்தியாக்கி அம்பாளுக்குக் குடமுழுக்குக் காணத்துடியாய் துடித்தார் எங்கள் தலைவர். நாம் நினைப்பதெல்லாம் இவ்வுலகில் நடப்பதில்லையே, அதுபோல் இதுவும் நடந்துள்ளது. அம்பாளுக்குக் கும்பாபிஷேகம் நடத்திவையாமலே நம் தலைவர் சென்றுள்ளார். இது நம்மவர் யாவரையும் துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னார் விட்டுச்சென்ற இக் கைங்கரிய பணியை செவ்வனே நிறைவு செய்வதுதான் நாம் நம் தலைவருக்குச் செய்யும் நன்றிக்கடனாகும். அப்போதுதான் அவருடைய ஆத்மா சாந்தி அடையும்.

இவர் உடுவிலிலே பிறந்து சங்கானையில் வசித்தாலும், சுழிபுரம் மண்மேல் அளவு கடந்த மோகங் கொண்டவர். ஆலயச் சூழலில் உள்ள மக்களுடன் சரளமாகப் பழகுவார். அவர்களது இன்பதுன்பங்களில் தேடிச் சென்று பங்குபற்றுவார். ஒரு ஆலயப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிபாலன சபையில் பத்து வருடங்களுக்குமேல் தலைவராக இருப்பதென்றால் லேசுப்பட்ட காரிமல்ல. இவர் யாருடைய வன் சொற்களுக்கும் ஆளானதில்லை. ஒரு பொறுப்பை ஏற்றால் எந்தச் சிறிய வேலையாக இருந்தாலும் அதை செவ்வனே செய்யும் கடமை வீரன். இந்த வயதிலும் ஒரு இளைஞனைப் போல் உற்சாகத்துடன் தனது கடமைகளைச் செய்வார். அவரைப் பார்த்தே நாம் அவர் வழி பின்பற்றினோம். நம் தலைவரைப் பிரிந்து தவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், நண்பர்களுக்கும் ஆறுதல் கூறுவதைத்தவிர எம்மால் என்ன செய்ய முடியும்? அமரரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எங்கள் பத்திரகாளித்தாயினுடைய பாதார விந்தங்களை இறைஞ்சி நிற்கிறோம்.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் அண்ணாவே எனக்கு என்ன சொல்லிச் சென்றீர்?

மாஸ்டர் மாஸ்டர் என்று அன்பொழுக என்னை அழைக்கும் அந்த இதயதீபம் அணைந்துவிட்டது. சுந்தரம் அண்ணா அவர்கள் என்னுடன் உடன் பிறவாத ஒரு அண்ணர் என்றே கூறவேண்டும். கூடப்பிறந்த சகோதரத்திலும் பார்க்க என்னில் கூடிய அன்பும் விசுவாசமும் வைத்திருந்தார். இது நாடறிந்த விடயம்.

எண்ணரிய பிறவிகளில் மானிடப்பிறவிதான்
யாதினும் அரிது அரிது காணே!
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ!
யாது வருமோ அறிகிலேன்.

என்ற அருள் வாக்கினால் தாயுமானவர் மானிடப்பிறவியின் மாண்பினைப் போற்றுகிறார். பெறுதற்கரிய இம் மானிடப் பிறவியைப் பெற்ற நாம் இப்பிறப்பின் பெருமையை உணர்ந்து கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எம் ஆற்றலுக்கேற்ப சீரிய நற்பணிகளைச் செய்து சான்றோனாகச் சமுதாயத்தில் வாழுதல் சாலச்சிறந்தது.

இந்த வரிசையிலே எனது ஆழ்ந்த அன்புக்குரிய சுந்தரம் அண்ணா அவர்கள் மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து செயற்பட்டார். இவர் தனக்கென வாழாத பெருந்தகை. இவர் ஆற்றிய நற்பணிகள் அளவற்றவை. இதில் ஆலயப்பணியும் ஒன்று. ஆலயப்பணி செய்வதற்கு நாம் கொடுத்து வைத்துப் பிறந்திருக்க வேண்டும். இப்பேறு எல்லோருக்கும் கிடைக்காது. கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக எங்கள் ஆலயப் பணியின் நிமித்தம் இப்பெருந்தகையுடன் பழகும் வாய்ப்பை எங்கள் சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் எனக்குத் தந்தருளினார். ஆரம்பத்தில் ஆலயப்பணி சமூகப்பணி போன்றவற்றை எங்கள் சுந்தரம் அண்ணாவிடமிருந்தே கற்றுக் கொண்டேன் என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகின்றேன். யாழ் குடாநாட்டில் பல கல்விமான்களின் நட்பு சுந்தரம் அண்ணா அவர்களினால் எனக்குக் கிடைத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் அனேகர் சுயநலத்துடன் தங்களது சொந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனேதான் ஒருவருடன் நட்புவைக்கிறார்கள். தங்களது தேவை நிறைவெய்தியதும் நட்பைத் துண்டித்துக் கொள்கிறார்கள். ஆனால் சுந்தரம் அண்ணா அவர்களோ இதற்கு நேர்மாறானவர். கிடைத்த நட்பைப் பேணிப் பாதுகாப்பவர். அத்துடன் உறவினரையும் பேணுவதில் முன்னுக்கு நிற்பவர். உறவினருக்கோ, நண்பர்களுக்கோ ஒரு இடுக்கண் வந்துவிட்டால் நேரங்காலம் பார்க்காது அவர்களது இல்லம்சென்று அவர்களது துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதிச் செயற்படுவார்.

இவர் தனது இளமைக்கால நிகழ்வுகள்பற்றி என்னுடன் பல வேளைகளில் அளவளாவியுள்ளார். இதில் தான் தனது இளம் வயதில் தாயாரை இழந்தது, தந்தையார் தன்னை வளர்த்த மாண்பு, தனது கல்வி, விளையாட்டுத்துறை, அக்கால நண்பர்கள், தான் வகித்த உத்தியோகம் போன்றவை அடங்கும்.

இதில் தந்தை தன்னை வளர்த்த வளர்ப்பைக் கூறும் போது பாசம் மிகு தந்தையை எண்ணிக்கண் கலங்குவார். என்னைப் பொறுத்தவரை தாயை இழந்த ஒரு பிள்ளையை வளர்த்துச் சமுதாயம் மதிக்கும் ஒரு முழு மனிதனாக்குவதென்றால் தந்தையின் ஸ்தானத்தில் இருப்பவருக்குப் பலவித சோதனைகள், சிக்கல்கள் உண்டு.

> ''தந்தை மகற்காற்றும் நன்றி அவயத்து
> முந்தி இருப்பச் செயல்''

தாயோடு அறு சுவைபோம் தந்தையோடு
கல்வி போம் என்பார்கள். நான் கூறுவதெ
ன்றால் தந்தையுடன் சகலதும் போம்
என்றுதான் கூறுவேன். இதற்குக் கார
ணங்கள் பலவுண்டு.

தன் பிள்ளைக்கு அறிவுச் செல்வத்தை வழங்கி
வாழ்வாங்கு வாழவைக்கும் தந்தையின்
பணி அளவிடற்கரியது. தந்தை சமுகத்
திற்கு மாண்புள்ள அங்கத்தவர்களை உரு
வாக்குவதில் முன்னிற்கின்ற ஒருபாத்திரம்.
தந்தையின் சொல்லும் செயலும் மைந்தர்களை
நல்வழிப்படுத்தும் மந்திரங்கள். உலகுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவும் பிள்ளைகளை வளர்க்கும் தந்தைக்கு நிகர் இவ்வுலகில் எதுவுமே இல்லை. பெருமைக்குரிய தந்தையைப் போற்றி வாழ்பவன் வாழ்வில் எல்லா நலன்களையும் பெறுவான் என்பதில் ஐயமில்லை.

இதற்கேற்ப எங்கள் சுந்தரம் அண்ணா அவர்களும் தனது தந்தையின் பெருமையை உணர்ந்து தனது கடைசிக்காலம் வரை தந்தையைப் போற்றியே வாழ்ந்தார். அத்துடன் அமரர் ஒரு விளையாட்டு வீரர். வீரர் என்று சொல்வதிலும் பார்க்க ஒரு விற்பன்னர் என்றே கூறலாம். அகில இலங்கைரீதியாகப் பல விளையாட்டுகளை (போட்டிகளை) நடாத்தி வெற்றிவாகை சூடினார் விளையாட்டுத்துறை அமரருக்கு பல நற்பண்புள்ள நண்பர்களைத் தேடிக்கொடுத்துள்ளது.

இவர் குழந்தை உள்ளம் கொண்டவர். எதையும் ஒளிவு மறைவு இன்றிப் பச்சையாகக் கூறும் சுபாபவம் கொண்டவர். எண்பது வயதாகியும் ஒரு இளைஞனைப்போல் இவர் துவிச் சக்கர வண்டியில் பயணம் செய்யும் காட்சி என் கண்முன் இப் பவும் திரைப்படம்போல் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்நிலை யில் இவர் திடீரென நோய்வாய்ப்பட்டார். சுடுதியில் எழுந்து எம்முடன் செயற்பட வருவார் எனக் காத்திருந்தேன். இதை யறிந்த காலன் முந்திக் கொண்டான். என்னே விதியின் விளை யாட்டு மாஸ்டர் மாஸ்டர் என்று அழைக்கும் நாதம் ஓய்ந்து விட்டது எங்கள் சுந்தரம் அண்ணா இறந்து விட்டார். இனி எப் பிறப்பில் அவரைக் காண்போம்.

அமரரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆறு தல் கூறி அமரரின் ஆன்மா அம்பாளின் பாதாரவிந்தங்களைச் சென்றடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

பத்மலோஜினி பவனம்,
பத்திரகாளி கோவிலடி,
சுழிபுரம்.

கு. பொன்னுத்துரை
ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லோருக்கும் இனியவர் இராமலிங்கம் சுந்தரம் அவர்கள்

மறைந்தும் எனது நெஞ்சத்தில் மறையாத இடம் பெற்றுள்ள அன்பர் சுந்தரம் அவர்கள் உடுவிலைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் ஏற்று பெருமைப்படுத்தியவர்.

சங்கானையில் இராமலிங்கம் அவர்களது புத்திரியை மனையாளாகக் கொண்டு இனிதே வாழ்ந்த காலப் பகுதியே என்னுடன் பழகிய காலம். அந்தக் காலப் பகுதியில் குறிப்பாக இவருடன் இணைந்து திகழ்ந்தவர்கள் மறைந்த இரண்டு செல்லையாக்கள் இவர்கள் மூவருமாக பெரு நோக்கத்துடன் ஆற்றிய பொதுச் சேவைகள் பல. குறிப்பாக வீதி அபிவிருத்திகள் என் மனதைத் தொட்ட ஒன்று.

சுந்தரம் அவர்கள் ஒரே பொழுதில் இரண்டு பெரும் அம்மான் ஆலயங்களில் நிர்வாகப் பங்காளராகவும் சுழிபுரத்தில் பத்திரகாளி அம்மாள் ஆலயத்தில் நீண்ட காலமாக தலைமைப் பதவியிலும் இருந்து வந்துள்ளமை பெருமைப்பட வேண்டிய ஒன்று. மற்றையவர்கள்பால் காணற்கரிய, சிறப்பாக எவருடனும் பெருமைப்படாது இன்முகத்துடன் பழகும் தனித்துவம் கொண்ட பண்புடையாளர் சுந்தரம் அவர்கள் என்றால் மிகையாகாது.

பூதவுடல் மறைந்தாலும் புகழுடல் நிலைக்கும் என்பதற்கமைய பெரியார்கள் வரிசையில் சுந்தரம் அவர்களும் இடம் பெறுகின்றார்.

அன்னாரது ஆத்மசாந்திக்கு அம்பாள் துணை அருகேயிருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவ்வேளையில் அன்னாரைப் பிரிந்த பிரிவினைத் தாங்காது தவிக்கும் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆத்மா சாந்தியடைய பகவானை வேண்டி நிற்கின்றேன்.

நிற்சாமம், சங்கானை.
17-03-1994.

அன்பின்,
மாணிக்கம் கணேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றைக்கும் எமது இதயத்தால் மறக்க முடியாதவை

தந்தையாகவும், உறவினராகவும், நண்பனாகவும் எங்கள் இடத்தில் தனது வயது முதிர்ந்தவரை எமது அன்பையும் நன்மதிப்பையும் பெற்று வாழ்ந்தவர். அவரது 81 ஆவது வயதிலும் கூட இறைவனடி செல்வதற்கு 15 நிமிடத்திற்கு முன்பும் என்னிடத்தில் அவர் அளவளாவிய வார்த்தைகள் எனது நெஞ்சில் என்றைக்கும் விட்டகலாது. அவர் வீட்டில் ஏதாவது பிரச்சினைகள் என்றால் அவர் குடும்பத்தவர்களால் தீர்க்க முடியாத பிரச்சினைகளுக்கு என்னுடைய ஆலோசனைப்படி ஏற்றுக் கொண்டு நடந்தவர். நான் அவரின் பாதி வயதிலும் சிறியவனாக இருந்தும்கூட நியாயத்திற்கு மதிப்புக் கொடுத்து நடந்த ஒருவரை எனது குடும்பம் இன்று இழந்துவிட்டது.

அன்னாரின் இறப்பின் மூலம் அவருடைய தெய்வபக்தியும் அவரின் தூய்மையான உள்ளத்தை நான் உணரக் கூடியதாக இருந்தது. எனவே அவரின் ஆத்மா சாந்தியடைய காளி அம்பாளை வேண்டிக்கொண்டு அன்னாரின் குடும்பத்திற்கு எனது இதயம் நெகிழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஓம் சாந்தி!

அன்பான

சங்கானை செல்லையா கோபாலகிருஷ்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்து சங்கானைப் பதியிற்
கோயில் கொண்டருளும்

# ஸ்ரீ காளி அம்பாள்மேற் பாடிய திருவூஞ்சல்

## காப்பு

ஆரணை நூல் வழுவாத யாழ்ப்பாணத்துப்
பார் புகழுஞ் சங்கைநகர் தனிலே மேவி
நாரணரும் நான்முகனும் தேவரோடும்
பே லகில் விஸ்வகர்ம குலத்தோரேத்தப்
பேரணங்காம் அருட்காளித் தாயாரின் மேல்
பேர்பெறும் ஊஞ்சலிசை பேணிப்பாட
காரணனாம் முழு முதற் கடவுளான
வாரண முகவனடி பணிதல் செய்வாம்

## திருவூஞ்சற் சிறப்பு

பேசு முயர் நால் வேதங்கால்களாகப்
பெரிய சிவாகமங்கள் விட்டமாக
வீசு திரு மந்திரமே கயிறதாக
விழுமிய நற் பிரணவமே சலாகையாக
தேசு மிகும் அட்சரங்கள் பீடமாக
அருளியுந் திருவூஞ்சல் தனிலேயேறி
மாசு இலாச் சங்கை நகர் தனிலே மேவு
சிறீ காளித் தாயாரே ஆடீரூஞ்சல்

## ஆட்டும் சிறப்பு

அரியபனார் வடம் பிடித்தே யயல் நின்றாட்ட
அறுமுகவன் தமிழ் வளர மருங்குற்றாட்டக்
கரிமுகவன் புழைக் கரக்காற் களித்தே யாட்டக்
கருணை பொழி தவள நகை கனிந்து காட்டிப்
பரவு மடியார் கூட்டம் பாங்கிற் கூடிப்
பத்திமையா லானந்த பாஷ்பங் காட்டத்
திரமுறு நற்சங்கை நகர்ப் பதியில் மேவுஞ்
சிறீ காளித் தாயாரே யாடீரூஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபகாரச் சிறப்பு

இந்திரனும் கருணனும்மின் பனி நீர் வீச
இயக்கனடை தர நிருதி பணிக்கந் தாங்கச்
சந்திரனாரிரவி வட்டம் தளர்ந்தே வீசச்
சதாகத்துருத்திரர் சிவிறி கவரி வீச
மந்திரங்கள் நிறைவாகி மறைகள் வாழ்த்த
மறலி யனல் வாள் சூலம் வாங்கிக் காக்கச்
செந்திருவார் சங்கை நகர் தனிலே மேவுஞ்
சிறீ காளித் தாயாரே யாடீரூஞ்சல்

## கீதச் சிறப்பு

நாரதரும் தும்புருவும் வீணை மீட்ட
நாகசுர வாத்தியத்தார் கீதம் பாடப்
பாரதர்கள் நாட்டியங்கள் பாட்டோ டாடப்
பாவலரும் நாவலரும் தமிழே பாடப்
பேரதனை ஆரமாய் இசைத்தே பாட
மணி யொலிக்க மறையோதி முனிவர் நாடத்
தாரகனைச் செற்றவளே பகைமை நீக்குந்
தகையணங்கே சிறீ காளி யாடீரூஞ்சல்

## வாத்தியச் சிறப்பு

துடி முழவுந் தண்ணுமைகள் துவன்றி யார்ப்பத்
தூய பணை திமிலை கானந்துளங்கி யார்ப்பக்
கடி முரசு மத்தளங்கள் கலந்தே யார்ப்பக்
சரம்புகு நல்லெகாளம் கதித்தே யார்ப்ப
நொடி சலரி குடவளைகள் நுணுகியார்ப்ப
நுடங்கு பல விலங்க வொலி நுவற்றி யாரிப்ப
கொடியணி மதிற் சங்கை நகரில் மேவும்
சிறீகாளித் தாயாரே யாடீரூஞ்சல்

## வீரச் சிறப்பு

ஆதி சிவன் திரு நடனங் கண்டடங்கி
அருமறைகள் ஆகமங்கள் போற்றும் வண்ணம்
நீதி நிலை பெற மகிடன் தன்னைக் கொன்றே
நிட்டுரத் தாருகனை நீறே யாக்கிச்

சோதி மிகப் பவன வடிவாகித் தக்கன்
சூர் வேள்வி தனையழித்துத் துயரம் போக்கிச்
சேர் திருவார் சங்கை நகர் தனிலே மேவும்
சிறீ காளித் தாயாரே யாடீருஞ்சல்

## அருட் சிறப்பு

பொங்கல் மடை புரிபவர் தந்துன்பம் போக்கி
பொருள் கல்வி கலை வளந்தந் தருளுந் தேக்கி
திங்கள் சனி ஞாயிறு சேய் தீமை நீக்கித்
தேவ குரு அரசகுரு கீர்த்தி நல்க
எங்கள் வினைப் பாவமெலா மெளிதின் மாற்றி
இராகு சிகிப் பகை வலியு மிரிய வாற்றி
தங்கு புகழ்ச் சங்கை நகர் தனிலே மேவும்
தாயாரே சிறீகாளி யாடீருஞ்சல்

## நாமச் சிறப்பு

சூரி யெங்கள் மாதங்கி சூலமேந்தீ
தூரிய சிவ சண்டிகையே யெண்டோட் செல்வி
வீரி மிகும் மாலினி பைரவி சாமுண்டீ
வெற்றி மிக ஆடல்புரி கன்னி யெம்மைச்
சேர வரு வினை தீர்த்தே சித்தாந்தத்துள்
தெள்ளமுத மாயிலங்கி ஞானந்தந்து
சீரமருஞ் சங்கை நகர் தனிலே மேவும்
சிறீகாளித் தாயாரே யாடீருஞ்சல்

## விண்ணப்பச் சிறப்பு

பொங்கல் வடை பால் தயிர் தேன் பாயாசங்கள்
பொரியரிசி அவல் முறுக்குப் பழவர்க்கங்கள்
துங்க முறுமுன் முனர் யாம் படைத்தோ மீண்டே
தூய கலை கைத்திறன்கள் தயவோடீந்தே
அங்கமுறு கொடு பிணிகள் அகலச் செய்தே
ஆர்ப்பரித் திங்காடு பரதேவி அன்பர்
தங்களருந் துணையே யெந்தாயே சங்கைத்
தலத்தமரு சிறீ காளி யாடீருஞ்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடற் சிறப்பு

செந்தமிழு மாரியமும் சிறந்து வாழத்
தீயவர்கள் நீதியற்றோர் தீமை நீக்கிச்
சந்தமிகு மணிப்பலகை தனிலொய்யாரச்
சாந்தமிகு கோலமுறு வதனங்காட்டிச்
சுந்தர நீறைந்தெழுந்தார் மணிகள் சூடித்
தொல்லுலகிற் கீர்த்தியெலாந் துலங்கச் செய்தே
சிந்தை மகிழ் சங்கை நகர் தனிலே மேவும்
சிறீ காளித் தாயாரே யாடீருஞ்சல்

## வாழி

மணி வாழி திருநீறைந்தெழுத்தும் வாழி
மழை வளமும் அந்தணரும் ஆவும் வாழி
பணி வாழி பாமரர்கள் வாழ்வும் வாழி
பலதிறக் கைப் பணிகள் தருவோர் வாழி
மணி ஈழ வளம் வாழி மக்கள் வாழி
மனுநீதி முறை வாழி சான்றோர் வாழி
அணியாரும் சங்கை நகர் தனிலே மேவும்
அருள் மிகுமெம் சிறீ காளி வாழி வாழி

## லாலி

சுத்த சிவ சக்தியே லாலி லாலி
சூக்கும சொரூபியே லாலி லாலி
வித்தகியே நாயகியே லாலி லாலி
வீரமிகு நர்த்தகியே லாலி லாலி
புத்தி சித்தியானவளே லாலி லாலி
பூரணி புராதனியே லாலி லாலி
பக்தி செய்வார் மெய்த்துணையே லாலி லாலி
பராபரையே சிறீகாளி லாலி லாலி

## பராக்கு

ஓங்கார ரூபியிறையே சக்தி பராக்கு
ஒண் பொருட் செல்வி பரதேவி பராக்கு
ஆங்கார மோடாடு மாதி பராக்கு
அற்புதங்கள் காட்டுமன்னே பராக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீங்கேதும் தாங்காத தாயே பராக்கு
திரியம்பகி தெய்வசூலி பராக்கு
பாங்காக வந்தருள் பரையே பராக்கு
பரிவான சிறீகாளிப் பேடே பராக்கு

## எச்சரிக்கை

சொல்லார்ந்த சுருதி யொளிக் கெச்சரிக்கை
சோதி மணி முடித்தேவிக் கெச்சரிக்கை
வல்லார்க்கு வரமருள் வாட் கெச்சரிக்கை
வடிவாம்பிகா மாதுக் கெச்சரிக்கை
கல்லார்க்குங் கலையருள் வாட் கெச்சரிக்கை
கருணை வடிவானவளுக் கெச்சரிக்கை
பொல்லார்க்கும் நலன் பயப்பாட் கெச்சரிக்கை
போத சிறீ காளியுமைக் கெச்சரிக்கை

## மங்களம்

தங்கு நிதி பொங்கு மெழில் சங்கை நகர் மேவுமிறை
சக்தியே திருமங்களம்
தளிரடியெடுத்து நடமடுபுவன சுந்தரி தயாபரி திரு மங்களம்
சிங்கமதி லேறி விளையாடி வினைநாடிவரு
கிவையம்மை திருமங்களம்
சீருயர் வனப்பு மிகு சேவடி யசைந்துவரு
சியாமளீ திரு மங்களம்
அங்கையினி லேந்தியெரி யாடிவரு தேவியுமை
ஆங்காரி திரு மங்களம்
ஆயகலைகள் பலவு மன்று மென்றும் அருள்
அம்பிக திரு மங்களம்
குங்கும நிறத்தழகு பொங்க வொளிவீசியே
கொண்டாடுவோய் மங்களம்
கூத்தாடுஞ் சங்கை நகர்ச் சிறீகாளி அம்மையே
மங்களம் சுப மங்களம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★〉 வம்சாவ

### இராமலிங்கம் சுந்தர

| | | | | |
|---|---|---|---|---|
| வேலுப்பிள்ளை | பாலகிருஷ்ணன் | யோகேஸ்வரன் | பாக்கியலட்சுமி | சறோ |
| + | (அபுதாபி) | + | + | + |
| சரஸ்வதி | | மங்களராணி | மகாலிங்கம் | மகேந்தி |
| | | (சுவிஸ்) | | |
| கமலினி | | | சுகிர்தா | கஜநாத் |
| தட்சாஜினி | | | சுதாகர் | அமுதா |
| கங்காசுதன் | | | நிசாந்தன் | சிந்தாஜ |
| | | | | (லண்ட |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவளி

சந்தரம் + பராசக்தி

| | | | | |
|---|---|---|---|---|
| சறோஜினி | பத்மாவதி | பத்மநாயகி | தனபாலசிங்கம் (லண்டன்) | சுபாஜினி |
| + | + | + | | |
| மகேந்திரன் | கோபாலகிருஷ்ணன் | சந்திரசேகரம் | | |
| கஜநாத் | மேகலா | சகானா | | |
| அமுதாஜினி | விஷ்ணுவர்த்தன் | சரன் | | |
| சிந்தாஜினி | மித்திரா | (ஜேர்மனி) | | |
| (லண்டன்) | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கிறோம்

எமது குடும்பத் தலைவரது இறுதிக் கிரியைகளிலும், இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து கொண்ட, உதவிகள் புரிந்த, அனுதாபச் செய்திகள் தந்த அனைவருக்கும் எமது மனமு வந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி.

காளிகோவிலடி,
சங்கானை.
28-3-94

அமரரின்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org